IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.03/2009

| | |
|---|---|
| Deposition of Witness | : PW-2 |
| Name | : தீனதயாளன் |
| Father's Name /W/o | : த/பெ.ரங்கநாதன் |
| Religion | : இந்து |
| Caste | : - |
| Calling | : கூலி வேலை |
| Address | : பனப்பாக்கம் கிராமம், நெமிலி வட்டம். |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 11.10.2022.

குறுக்கு விசாரணை

சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. செல்வராஜ் அழைந்து வந்ததன் பேரில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் ஆம். பிரதிவாதிகள் யார் யார் என்றால் செல்வராஜ், வள்ளியம்மாள், வரதன். நான் பனப்பாக்கத்தில் உள்ளேன் என்றால் ஆம். எவ்வளவு காலமாக உள்ளேன் என்றால் பிறந்து வளர்ந்த முதல் அங்கு தான் உள்ளேன். தாவா சொத்து பயிர் செய்து வருவதாக சொல்லியுள்ளது குத்தைக்காக என்றால் இல்லை உடன் வேலை செய்வேன். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2.76 ஆகும். எவ்வளவு அளவிற்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் 84 சென்ட் ஆகும். கிழக்கு பக்கம் யாருடைய சொத்து என்றால் பெயர் ஞாபகமில்லை. மேற்கு பக்கம் கால்வாய் ஓடை உள்ளது. வடக்கு பக்கம் ரோடு உள்ளது. தெற்கு பக்கம் நிலம் உள்ளது. பயிர் செய்யும் இடத்தில் தாவா சொத்தில் கிணறு உள்ளதா என்றால் இல்லை. பயிர் எப்படி செய்கிறார்கள் என்றால் மழை பயிர்களான துவரை, வேர்கடலை போடுவோம். தற்போது என்ன பயிர் உள்ளது என்றால் கொரோனா பிறகு அங்கு செல்வதில்லை. தற்போது காலியாக இருப்பதாக செல்வராஜ் சொன்னார். வாதி அனுபவித்தில் உள்ளதற்கு பட்டா பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவர் பட்டா தாக்கல் செய்துள்ளாரா என்று தெரியுமா என்றால்

தெரியாது. கிஸ்து ரசீது தாக்கல் செய்துள்ளாரா என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் பனப்பாக்கத்தில் உள்ளேன் என்றாலும் நான் தாவா சொத்திற்கு சென்றதே இல்லை என்றால் சரியல்ல. நான் செல்வராஜ் தம்பி வீட்டில் தான் தங்கியிருந்தேன். செல்வராஜ் தம்பி வீட்டில் தங்கி பயிர் செய்த விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் வானம் பார்த்த பூமி இல்லை என்றாலும் தற்போது கூட பத்துக்கு பத்து நெல் வகை பயிர் செய்து பயிர் மூன்று மாதம் பயிராக உள்ளது என்றால் நான் நிலத்திடம் சென்று மூன்று வருடம் ஆகிறது. தாவா சொத்தின் மேற்கு பக்கத்தில் பிரதிவாதியின் சொத்து 20 வருடமாக அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் அதிலிருந்து தான் தண்ணீர் எடுத்து பயிர் செய்து வருகிறார்கள் என்றால் அதை பற்றி தெரியாது. தாவா சொத்தை வாதிகள் 20 வருடத்திற்கு முன்பே கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றாலும் அவர்கள் அந்த இடத்திற்கே வருவதில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. செல்வராஜ் பனப்பாக்கத்தில் தான் நிரந்தரமாக உள்ளார் என்றால் ஆம். செல்வராஜ் தாவா சொத்தை அனுபவித்தது கிடையாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. பிரதிவாதிகள் பெயரில் பட்டா, அடங்கல் வாங்கி பெற்று கிரைய நாள் முதல் அனுபவித்தில் உள்ளார் என்றால் நான் கூலி வேலைக்கு மட்டும் தான் சென்றேன். மற்ற விவரம் எனக்கு தெரியாது. மாத கூலி அல்லது வார கூலி என்றால் கூப்பிடும்போது செல்வேன். செல்வராஜ் என் ஊருக்காரர் என்பதால் அவருக்கு பவ்வியப்பட்டு சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.